**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.6

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. M. ஷேக்தாவுது இதயதுல்லா | Father's Name. முகம்மது ஆதம் |
| Village : நாகப்பட்டினம் | Age: 52 |
| Date : 02.07.2026 | தொழில் : -- |

நம்பர்: 94880 88044

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026.**

Signature of Interpreter

**( 4ம் எதிரி ஆஜர். 5ம் எதிர PT வாரண்ட் மூலம் ஆஜர் செய்யப்பட்டார். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் தற்போது நெ.31/20, சாலாபள்ளித்தெரு, நாகப்பட்டினம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனது 42வது வயதில் எனக்கு பக்கவாதம் ஏற்பட்டதால், நான் எந்தவித வேலைக்கும் செல்லாமல் வீட்டில் உள்ளேன். எதிரிகளை யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அசா.1 ஜெய்னுல் ஆமீதீன் எனது அண்ணன். சம்பவ சமயத்தில் நான் அவரது கடையில்தான் வேலைப்பார்த்து வந்தேன். கடந்த 2018 ஆம் வருடம் ஒருநாள் தேதி மாதம்

ஞாபகமில்லை. நான் எனது அண்ணன் கடையில் வேலைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த கடையில் வேலைப் பார்த்த ஒரு பையன் ஓடிவந்து எனது அண்ணனின் செல்போனை யாரோ பிடிங்கி சென்றுவிட்டதாக தகவல் சொன்னான். அதனடிப்படையில் நான் உடனடியாக ஸ்பாட்டிற்கு சென்றேன். நான் அங்கு போவதற்குள் என் அண்ணனிடம் செல்போன் பறித்த நபர்கள் ஓடிவிட்டார்கள். நான் அவர்களை பிடிக்க பின்தொடர்ந்து ஓடிப் பார்த்தேன். அதற்குள் அவர்கள் சென்றுவிட்டதால், என்னால் அவர்களை பிடிக்க முடியவில்லை. சிறிது நேரத்தில் அவர்களை அரசு மருத்துவமனையில் வைத்து பிடித்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அந்த சமயத்திலேயே சம்பவ நடந்த பேருந்து நிலையத்தில் சிசிடிவி கேமராவெல்லாம் பொருத்தப்பட்டிருந்தது. பிடித்த நபர்களை காவல் நிலைய ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வெளிப்பாளையம் காவல் நிலையம் அழைத்துச் சென்றுவிட்டார்கள். அதன்பின்னிட்டு என்ன நடந்தது ? என்று எனக்கு தெரியாது. நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அந்த சமயத்தில் நான் நாகூரில் உள்ள எனது மாமியார் வீட்டில்தான் தங்கியிருந்தேன். தற்போதும் நான் மாமியார் வீட்டில்தான் வாடகைக் கொடுத்து தங்கியுள்ளேன். இருட்டாக இருந்ததால் போலீசார் ஜீப்பில் யாரைப் பிடித்துக்கொண்டு காவல் நிலையம் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது.

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**.

எதிரிகளும், அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும் ஆஜராகியிருந்தும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் வழங்கப்பட்டும், எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.02 18:50:14
+0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.7

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. D. சிவப்பிரகாசம். | Father's Name. தனபால் |
| Village : திருச்சி, | Age: 55 |
| Date : 02.07.2026 | தொழில் : காவல் ஆய்வாளர் |

நம்பர்: 94981 33155

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026.**

Signature of Interpreter

**( 4ம் எதிரி ஆஜர். 5ம் எதிர PT வாரண்ட் மூலம் ஆஜர் செய்யப்பட்டார். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது திருச்சி மாநகரம், கண்டோண்மெண்ட் காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.06.2018 ஆம் தேதி காலை 10.00 மணியளவில், நான் வெளிப்பாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபொழுது, ஜெய்னுல் அமீதீன் என்பவர் நிலையம் ஆஜாகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று,

வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.160/2018 இதச பிரிவு 395ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அசாஆ.5**.

பின்னர் வழக்கு கோப்பினை நானே புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான வெளிப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனை செல்லும் ரோட்டின் சந்தின் முனையிடம் சென்று, சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகளான காசிபிரசாத் மற்றும் ராஜன் ஆகியோர்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பார்வை மகசர் **அசாஆ.6**. மாதிரி வரைபடம் **அசாஆ.7**. 1 முதல் 7 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால், அன்றே எதிரிகளை தேடிச்சென்றேன். அன்று வெளிப்பாளையம் ரயில்வே ஸ்டேசன் அருகில் கருவைக்காட்டில் மறைந்திருந்த இவ்வழக்கு எதிரிகள் 5 பேரையும், பகல் 12.30 மணியளவில் கைது செய்தேன். அப்போது அங்கிருந்த சாட்சிகளான நாகலிங்கம் மற்றும் முகம்மது ரஃபீக் ஆகியோர் முன்னிலையில், 1ம் எதிரி அருண்குமார் குற்றத்தை ஒப்புக்கொண்டு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதனடிப்படையில் அவர் ஆஜர் செய்த ஆப்பிள் ஐ போன் செல்போன் ஒன்றையும், பிச்சுவா அருவாள் ஒன்றையும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகசர் தயார் செய்து அன்று பிற்பகல் 02.00 மணியளவில் கைப்பற்றினேன். அதற்கான கைப்பற்றுதல் மகசர் **அசாஆ.8**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்

சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை எதிரிகளுடன் நிலையம் கொண்டுவந்தேன். எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை படிவம் 91னின் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். அதற்கான படிவம் 91 **அசாஆ.9**. பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். தற்போது காட்டப்படும் வீச்சுவா அருவாள்தான் 1ம் எதிரி ஆஜர் செய்ய நான் கைப்பற்றியது. அந்த வீச்சுவா அருவாள் **சாபொ.1**.

**குற்றம்சாட்டப்பட்டவர்கள்தரப்பு குறுக்கு விசாரணை**.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது உள்ளிட்ட, குற்ற அறிக்கை தாக்கல் செய்ததுவரை அனைத்தையும் நான்தான் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நானே பதிவு செய்து புலன் விசாரணை அதிகாரியாக செயல்பட்டதால், அசா.1றிடம் செல்போன் பறித்த நபர்களை கண்டுபிடிக்க இயலாமல், அந்த வழக்கை எதிரிகளைக்கொண்டு முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் வழக்காவணங்கள் அனைத்தையும், நானே தவறுதலாக தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக தவறான குற்ற அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புகாரினை பெறுவதற்கு முன்பாகவே, எதிரிகளை காவல் நிலையம் அழைத்துச் சென்றுவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் மற்றும் சாட்சிகளுடைய குவிமுச. பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்கள் ஆகியவைகள் அனைத்தும் நிலையத்தில் வைத்து எதற்காக கணினியில் தயார்

செய்யப்பட்டது என்றால், மடிக்கணினியில் சம்பவ இடத்திலும், எதிரிகளை கைது செய்த இடத்திலும் தயார் செய்தேன். அந்த விவரம் மேற்படி ஆவணங்களிலோ, சாட்சிகளின் வாக்குமூலங்களிலோ குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா ? என்றால் இல்லை. மடிக்கணினியில் வைத்து தயார் செய்ததாக சொல்லப்படும் மேற்படி ஆவணங்களை எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது ? என்றால், காவல் நிலையத்தில் வைத்துதான் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது.

கடந்த 14.06.2018 ஆம் தேதியன்றே, தயார் செய்ததாக சொல்லப்படும் மேற்படி ஆவணங்களை, அதன்பின்னிட்டு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படும்பொழுது ஏன் அந்த வழக்காவணங்கள் மற்றும் குற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை ? என்றால் காரணங்கள் கூற இயலாது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும், இவ்வழக்கின் குற்ற அறிக்கையுடன் காலதாமதமாக 03.09.2018 ஆம் தேதிதான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரிகளை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும், 1ம் எதிரி, நான் சாட்சியமளித்ததுபோல, எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும், அதனடிப்படையில் சாபொ.1 ஆன வீச்சவா அருவாள், செல்போன் ஆகியவைகள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் செல்போன் அசா.1 உடையது என்பதை காட்ட ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா ? என்றால் இல்லை. இவ்வழக்கின் குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டதுபோல சம்பவம் நடந்தது என்பதை உறுதிப்படுத்த, அந்த இடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை பெற்று நான் ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், அசா.1றின் சாட்சியம் உறுதிப்பட இருந்ததால், அதைப்பெற்றுத் தாக்கல் செய்யவில்லை. அசா.1 கொடுத்ததாக சொல்லப்படும் அசாஆ.1 ஆன புகாரில்

எதிரிகளின் பெயர் விவரங்களையோ, எதிரிகளின் அங்க அடையாளங்களையோ, எதிரிகளை தங்களுக்கு தெரியும் என்றோ ஏதாவது குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா? என்றால் இல்லை. அவ்வாறான சூழ்நிலையில் எதிரிகளை கைது செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட பின்னிட்டு அவர்கள்தான் அசா.1றிடம் செல்போன் மற்றும் பணத்தை பறித்தார்கள் என்பதை உறுதிப்படுத்த, நீதித்துறை நடுவர் முன்னிலையில், ஏதேனும் அடையாள அணிவகுப்பு நடவடிக்கை மேற்கொண்டேனா ? என்றால் இல்லை.

இந்த வழக்கு உண்மை தன்மை இல்லை என்பதாலும், ஏற்கனவே கொலை, சாராய வழக்குகள் இருந்ததாலும், சரித்திர பதிவேடு குற்றாவளிகள் என்பதாலும், அவர்களை வெளியே இருக்கவிடாமல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டி, இந்த வழக்கே உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆனால், எதிரிகளுக்கு கொலை, சாராய வழக்கு உள்ளது மற்றும் அவர்கள் சரித்திர பதிவேடு குற்றவாளிகள்தான். சாபொ.1 ஆன வழக்குச் சொத்தானது வழக்கிற்காக தவறாக என்னால் உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக வழக்குப்போட்டு எதிரிகளின் பெயர்களை குற்ற அறிக்கையில் தவறாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தவறான வழக்கு போட்டதுமின்றி தவறான ஆவணங்களை உருவாக்கி, அதற்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.02 18:50:36 +0530